**ஒதுக்கீட்டுத் தலைப்பு 262, மாத்தறை மாவட்டச் செயலகம்**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 மாவட்டச் செயலகத்தின் பிரதான பணிகள்

---

2013 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் பிரதான பணிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) வினைத்திறனானதும் பயனுறுதி மிக்கதுமான மாவட்ட நிர்வாக முறையொன்றை பேணிச்செல்லல்.

(ஆ) மக்கள் திருப்தியை உயர்த்தும் விதத்தில் பொதுத் துறையின் ஊடாக வினைத்திறனான சேவைகள் வழங்கப்படுவதனை உறுதி செய்தல்.

(இ) பெறுபேற்றை அடைதல் எண்ணக்கரு, பொறுப்புக்கள், சிக்கனமான வளப் பாவனை, பக்கச்சார்பின்மை, வெளிப்படைத் தன்மை போன்ற அர்த்தமுள்ள முறைமைகளை அரசாங்க சேவையினுள் ஸ்தாபித்தல்.

(ஈ) அரசாங்கத் துறையின் மனித வள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய கொள்கைகளை அமுலாக்கல்.

(உ) அரசாங்க உத்தியோகத்தர்களின் ஓய்வூதியம் தொடர்பான கொள்கைகளுக் கேற்ற நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

(ஊ) மாவட்டத்தினுள் செயற்படுகின்ற பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் அதிகாரசபைகள் மூலம் அமுலாக்கப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களையும் செயற்திட்டங்களையும் ஒழுங்கு செய்தல், நிதி மற்றும் நிதிசாராத வளங்களை ஈடுபடுத்துதல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளில் ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டு மாவட்ட மக்களின் நலனோம்பல் மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்தல்.

(எ) மாவட்ட அதிகாரப் பிரதேசத்தினுள் வாழும் மக்களின் பல்வேறு வகைப்பட்ட பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார தேவைப்பாடுகளை மாவட்டச் செயலகம் மற்றும் 16 பிரதேச செயலகங்களினூடாக நிறைவேற்றுதல்.

(ஏ) மாவட்டத்தின் அரசாங்க முகவராக செயற்பட்டு பல்வேறுபட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களிற்கு சரியான தீர்மானமெடுத்தலுக்கு அவசியமான சரியான மற்றும் உறுதியான தகவல்களை கிராமிய மற்றும் பிரதேச மட்டத்தில் திரட்டி தொகுத்து வழங்குதல்.

(ஐ) மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினூடாக அரசாங்கத்தின் பல்வேறு திணைக்களங்களின் சார்பாக மாவட்டத்தினுள் அவைகளுக்குரித்தான வருமானங்களை ஒன்று திரட்டுதல், கணக்கீடு செய்தல் மற்றும் அவற்றை பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைத்தல்.

(ஒ) வெள்ளம், சூறாவளி, வரட்சி, ஆழிப் பேரலை போன்ற அவசர அனர்த்த நிலமைகளில் மக்களுக்குத் தேவையான உடனடி நிவாரணச் சேவைகள் மற்றும் உதவிகளை வழங்கி அவர்களது வாழ்வாதாரத்தினை முன்னைய நிலைக்குக் கொண்டுவருதல்.

(ஓ) மாவட்டப் பாதுகாப்புக் குழுவின் தலைமையாகச் செயற்பட்டு மாவட்டத்தில் வசிக்கும் மக்களது பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஔ) மாவட்டத்தில் கலாசார, சமய மற்றும் அவ்வப்போது ஏற்படும் பிற அரச விழாக்களையும் ஏற்பாடு செய்யும் தலைமையாகச் செயற்படுதல்.

(க) பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத் திட்ட நிகழ்ச்சிதிட்டத்தை அமுல்படுத்தலும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, மாவட்ட அபிவிருத்திக் குழு என்பவற்றினது செயலாளராகப் பணியாற்றி மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தலும் அமுலாக்கலும் மேற்பார்வையிடலும்.

(கா) மாவட்டத்தின் 16 பிரதேச செயலாளர்களுடன் பிரதேச நிர்வாக நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் தலைமையமாகப் பணியாற்றுவதுடன் அவற்றின் வினைத்திறனை மேம்படுத்தலும்.

(கி) மாவட்டத்தில் நிர்வாக நடவடிக்கைகளின்போது செயற்திறனையும் தரத்தினையும் அரிகரிப்பதற்காக நவீன தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதுடன் அதற்காகப் பதவியணியினருக்கு ஊக்கமளித்தலும்.

(கீ) மாவட்ட அதிகாரப் பிரதேசத்தில் சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள் என்பவற்றினது பிரதித் தலைவராகப் பணியாற்றி ஒவ்வொரு நிறுவனத்தினதும்

குறிக்கோள், நோக்கங்கள், பணிகள் என்பவற்றை ஈடுடேற்றும் விதத்தில் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளுதல்.

(கு) சகல தேர்தல் நடவடிக்கைகளின்போதும், தேர்தல்கள் ஆணையாளரது பிரதிநிதியாகப் பணி புரிந்து மாவட்ட தெரிவு அத்தாட்சி உத்தியோகத்தராக நியாயமானதும் பாரபட்சமற்றதாகவும் தேர்தல்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(கூ) மாவட்டத்தினுள் உத்தியோகத்தர்களது ஆளுமை மற்றும் ஆற்றலை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

(கெ) அவசர நிலமைகளில் அரசாங்கத்தின் முகவராக இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல்.

(கே) வெளிநாட்டு உதவியுடனான செயற்திட்டங்கள் மற்றும் உள்நாட்டு நிதியச் செயற்திட்டங்களை கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடல் மூலம் சொத்து முகாமைத்துவ முறைமையை அபிவிருத்தி செய்தலும்.

## 1.2 மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

(அ) மாத்தறை
(ஆ) வெலிகம
(இ) கம்புறுபிட்டி
(ஈ) ஹக்மன
(உ) பஸ்கொட
(ஊ) கொட்டபொல
(எ) மாலிம்பட
(ஏ) அக்குறஸ்ஸ
(ஐ) திக்வெல்ல
(ஒ) திஹகொட
(ஓ) முலடியன
(ஔ) தெவிநுவர
(க) வெலிபிட்டிய
(கா) கிரிந்த புஹுல்வெல்ல
(கி) பிடபெத்தர
(கீ) அதுறலிய

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

மாத்தறை மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 29 ஆந் திகதி மாவட்டச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் மாத்தறை மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) இலிருந்து (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.6 இலிருந்து 1.15 வரையான பந்திகளில்

குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) ஒதுக்கீட்டுக்கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்**

மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடு ரூபா 910,726,406 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 909,731,765 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய ஏற்பாட்டில் ரூபா 994,641 தொகை அல்லது 0.11 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறு.

| செலவினம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 813,040,606 | 812,176,453 | 864,153 | 0.11 |
| மூலதனம் | 97,685,800 | 97,555,312 | 130,488 | 0.13 |
| மொத்தம் | 910,726,406 | 909,731,765 | 994,641 | 0.11 |

**(ii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 26 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 17 திணைக்களங்களினால் ரூபா 2,348,397,528 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதியேற்பாடுகளிலிருந்து 23 அமைச்சுக்கள் மற்றும் 16 திணைக்களங்களினால் முறையே ரூபா 803,874,088 தொகை மற்றும் ரூபா 1,441,648,439 தொகையாக ரூபா 2,245,522,527 கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சேமிப்பு முறையே ரூபா 67,711,037 மற்றும் ரூபா 21,253,839 தொகை அதாவது ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 0.35 சதவீதம் முதல்

65.62 சதவீதம் வரையான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தது. 2 அமைச்சுக்களினால் வழங்கப்பட்ட ரூபா 1,597,685 கூட்டுத்தொகையான மொத்த நிதியேற்பாடும் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஒரு அமைச்சினாலும் ஒரு திணைக்கத்தினாலும் வழங்கப்பட்ட ரூபா 12,312,440 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு ரூபா 1,988,855 இனால் மிகைத்து ரூபா 14,301,295 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

❖ மாத்தறை மாவட்டத்தின் தெவிநுவர, அக்குரஸ்ஸ, தெனியாய, வெலிகம மற்றும் திக்வெல்ல போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய 40 வீதிகளுக்கு காபட் இடுவதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மாவட்டச் செயலகத்தினால் தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் 2011 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இதற்காக 2011 ஆம் அண்டு முதல் 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 1,735,160,927 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 40 வீதிகளில் 25 வீதிகள் 2011 ஆம் ஆண்டின் திசெம்பர் வரையிலும், எஞ்சிய வீதிகள் 2012 ஏப்ரல் மற்றும் திசெம்பர் வரையிலும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த வேலை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

- 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வேலைகளின் திகதிகளை நீடிப்பதற்காக ஒப்பந்தக்காரரான தென் மாகாண விதி அபிவிருத்தி அதிகாரசபையினால் எவ்வித வேண்டுதல்களும் மாத்தறை மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

- வேலைகளுக்காக 40 தற்காலிக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் மொத்த மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 1,042,390,189 தொகையின் அடிப்படையில் 20 சதவீதமாக ரூபா 208,478,037 தொகை 2011 யூலை 08 ஆந் திகதி தென் மாகாண விதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.4 வழிகாட்டியின் பிரகாரம் அந்த முற்பணத்திற்காக காப்பீடு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- 2011 யூன் 14 ஆந் திகதி முதல் 2011 ஒக்தோபர் 19 ஆந் திகதி வரையான காலத்தில் இந்த ஒப்பந்தம் தொடர்பாக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 2,918,515,317 ஆக இருந்துது. அது தற்காலிக மதிப்பீடுகளின் பெறுமதி ரூபா 1,876,125,128 இனால் விஞ்சியிருந்தது. இதனால் தயாரிக்கப்பட்ட கிரய மதிப்பீடுகளின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

- உடுபில சந்தியிலிருந்து தெவ்சிறிகம ஊடாக கொகாவல சந்திவரை வீதியின் மொத்த மதிப்பீடு ரூபா 28,407,701 தொகையாக இருந்ததுடன் அதற்காக செலுத்த வேண்டிய சரியான முற்பணத் தொகை ரூபா 5,681,544 ஆக இருந்த போதிலும் முற்பணமாக ரூபா 9,898,898 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 4,217,354 தொகையான மேலதிக முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

❖ பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் திவிநெகும தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பழவகை மற்றும் ஏனைய கன்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்திட்டத்திற்காக 2013 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 13,333,980 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- இந்த கன்றுகளைக் கொள்வனவு செய்யும் போது அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

- 2012 இன் கொள்வனவு வழிகாட்டியின் அடிப்படையில் வழங்குனரின் விலையில் கன்றுகள் கொள்வனவு செய்வதற்கு இணங்கப்பட்டிருந்த போதிலும் விவசாயத் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட விலையில் கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டமையினால் ரூபா 1,689,220 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- ஆரம்பப் பாடசாலைகளுக்காக புதுவருடத்தில் சுபவேளையில் கன்றுகளை நடுவதற்கு உயர் வகையைச் சேர்ந்த பல்வகை பழக்கன்றுகளை வழங்க வேண்டிய போதிலும் ரூபா 1,019,690 பெறுமதியான 14,567 சிறிய அம்பரெல்லா கன்றுகள் மாத்திரம் உரிய செயற்திட்டத்திற்கு

வழங்கப்பட்டமையினால் செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

❖ திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 89,500 பெறுமதியான 12 கன்று வகைகளின் கீழ் 549 கன்றுகள் வழங்கப்பட்டிருந்தன. 2014 மே 28 ஆந் திகதி மேற்கொள்ளப்பட் பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதன் படி வழங்கப்பட்ட கன்றுகளில் 64 கன்றுகள் மீளக் கையளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு அதனைக் கையேற்ற தரப்பினர் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எஞ்சிய 485 கன்றுகளும் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும் பௌதீக பரிசோதனையின் போது 53 கன்றுகளை மாத்திரம் காணக்கூடியதாக இருந்தது. அதன் படி, ரூபா 51,980 பெறுமதியான 432 கன்றுகளின் நிலுவை வெளிப்படுத்தப்பட்டது.

❖ அக்குரஸ்ஸ பிரதேச செயலகத்திற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியேற்பாட்டின் கீழ் 2013 ஆம் ஆண்டில் கித்துள் குடிபானங்களை உற்பத்தி செய்வதற்காக ரூபா 150,000 கிடைத்திருந்தது. அந்த நிதியேற்பாட்டிலிருந்து ரூபா 142,590 தொகை கித்துள் குடிபான உற்பத்திக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும் எஞ்சிய தொகை பயிற்சி செயலமர்விற்கும் செலவிடப்பட்டிருந்தன. 2014 யூன் 20 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது செயற்திட்டம் அமுல்படுத்தப்படாமையும், உரிய சங்கத்தின் தலைவரின் பொறுப்பில் அந்த உபகரணங்கள் காணப்படாதிருந்தமையும் வெளிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 142,590 தொகை பயன்பாடற்றிருந்தது.

❖ பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியேற்பாட்டின் கீழ் சாரதி பயிற்சி மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக 2013 ஆம் ஆண்டின் போது சாரதி பயிற்சி பாடசாலைக்கு இரண்டு சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,577,800 தொகை செலுத்தப்பட்டிருந்தது. ஒரு நபருக்கு பயிற்சியளிப்பதற்காக ரூபா 9,800 படி 161 நபர்களுக்காக இந்த செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- பயிற்சியளிப்பதற்காக பணம் செலவிடப்பட்ட 161 நபர்களில் எழுத்து மற்றும் செயன்முறைப் பரீட்சையில் 107 பேர் மாத்திரம் சித்தியடைந்திருந்தனர். செயன்முறைப் பரீட்சையில் 4 பேர் சித்திபெறவில்லை. 49 பேர்

செயன்முறைப் பரீட்சைக்காகச் சமூகமளித்திருக்கவில்லை. 56 வயதுடைய ஒருவர் மரணமடைந்திருந்தார்.

- இந்த செயற்திட்டத்தின் நோக்கம் வேலைவாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சியளிப்பதாக இருந்த போதிலும் 40 வயதுக்கு மேற்பட்ட 25 பயிற்சியாளர்களுக்காக ரூபா 245,000 (25x9,800) தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்த 25 பயிற்சியாளர்களில் 15 பேர் மாத்திரம் அனுமதிப்பத்திரத்தைப் பெறக்கூடியதாக இருந்தது.

- சகல நலனாளிகளும் பயிற்சியைப் பெற்று சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றதன் பின்னர் கொடுப்பனவு செய்யவேண்டியிருந்த போதிலும் 81 பேர்களுக்காக மாத்திரம் அவ்வாறு செய்யப்பட்டிருந்தது.

- இதன் பிரகாரம் 161 பேர்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு 107 பேர்களுக்கு மாத்திரம் முடியுமாக இருந்தது.

❖ முன்பள்ளிப் பாடசாலைப் பிள்ளைகளுக்காக பால் ஒரு கோப்பை வழங்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சிலிருந்து 2013 ஆம் ஆண்டின் போது திக்வெல்ல பிரதேச செயலகத்திற்காக ரூபா 269,200 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இந்த பிரதேச செயலகப் பிரிவில் 63 முன்பள்ளிப் பாடசாலைகள் காணப்பட்டதுடன் அவைகளில் மாணவர் எண்ணிக்கை 1,630 ஆக இருந்தன. அதில் 11 முன்பள்ளிப் பாடசாலைகளில் 247 பிள்ளைகளுக்காக பால் கோப்பை நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட பின்னர் ரூபா 123,381 தொகை அல்லது 46 சதவீதமான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

❖ வெலிகம தென்னை ஓலை வாடல் நோய்க்கு உள்ளாகிய காணிகளில் பழவகை பயிரிடும் செயற்திட்டத்தின் கீழ் மாத்தறை மாவட்டச் செயலகத்தின் ஊடாக 2013 ஆம் ஆண்டில் கமநல அமைச்சினால் ரூபா 6,640,000 தொகையான நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இதில் அன்னாசி, வாழை, கறிமிளகாய், பப்பாசி, ரெகன் புறுட் மற்றும் ஏனைய பழவகை கன்றுகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 5,620,000 தொகை மீளாய்வாண்டின் போது

செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

- இந்த சகல கன்றுகளின் கொள்வனவின் போது முறையான திட்டமொன்று பின்பற்றப்படாதிருந்ததுடன் மாவட்ட கமநல பணிப்பாளரின் விருப்பத்தின் படி கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

- இந்த செயற்திட்டத்திற்காக வாழைக் கன்றுகளைக் கொள்வனவு செய்யும் போது 2,000 வாழைக் கன்றுகளுக்காக மூன்று விவசாய சங்கங்களிலிருந்து கூறுவிலைகள் கோரப்பட்டு ஒரு வழங்குனரிடமிருந்து 3,650 கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கமநல அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட விலையினை விட கூடிய விலையில் கொள்வனவு செய்யப்பட்டமையினால் ரூபா 25,750 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- மேற்கூறப்பட்ட பிரகாரம் வழங்கப்பட்ட நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டு ஒரு இலட்சம் அன்னாசிக் கன்றுகள் ரூபா 14 படி ரூபா 1,400,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2013 யூலை 03 ஆந் திகதிய கடிதம் மூலம் உரிய வழங்குனர் ஒரு கன்று ரூபா 12 படி வழங்குவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட கூறுவிலைகள் தொடர்பாக கவனம் செலுத்தாது 2013 ஆகஸ்ட் 13 ஆந் திகதிய கடிதத்தில் காண்பிக்கப்பட்டள்ள பிரகாரம் ஒரு கன்று ரூபா 14 படி கொள்வனவு செய்யப்பட்டமையினால் ரூபா 200,000 நிதிரீதியான நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது.

- அன்னாசிக் கன்றுகளை வழங்கிய நாற்றுமேடையாளருக்கு ரூபா 126,600 பெறுமதியான 5,000 அன்னாசிக் கன்றுகளும் ஏனைய வகைகளில் 645 பழக் கன்றுகளும் வழங்கப்பட்டிருந்தன.

- கொடுப்பனவு உறுதிச்சீட்டில் இணைக்கப்பட்ட பகிர்வு பட்டியலின் பிரகாரம் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 317,050 பெறுமதியான 9,975 கன்றுகள் உரிய நபர்களுக்கு கிடைக்காதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

- அக்குரஸ்ஸ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் நலனாளிகளுக்கு ரூபா 481,360 பெறுமதியான 30,085 மிளகுக் கன்றுகள்

பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் கன்று பகிர்ந்தளித்தல் பட்டியலில் உரிய விபரம் காணப்படவில்லை.

- அக்குரஸ்ஸ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் நலனாளிகளுக்கான மிளகுக் கன்றுகளுக்கான பகிர்வு பட்டியலில் 1000 கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டமை ஒரே பெயர் இரு தடவை பிழையாகக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அவ்வாறு வழங்கப்பட்ட மிளகுக் கன்றுகளின் பெறுமதி ரூபா 16,000 ஆக இருந்தது.

- இந்த செயற்திட்டத்தின் கீழ் ரூபா 70 படி ரெட்லேட் வகையைச் சேர்ந்த 6,325 பப்பாசிக் கன்றுகள் ரூபா 442,750 தொகை செலுத்தி பெறப்பட்டிருந்தன. இந்தக் கன்றுகளை பகிர்ந்தளித்தல் தொடர்பாக 4 பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- பகிர்வுப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட கன்றுகள் உரிய நலனாளிகளுக்குக் கிடைக்காதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. தெரிவின் பிரகாரம் 05 நலாளிகளுக்கு 2,400 கன்றுகள் கிடைக்கப்படாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டதுடன் அதன் பெறுமதி ரூபா 168,000 ஆகும். இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பொது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

  - கன்று பகிர்ந்தளித்தல் பதிவேட்டின் பிரகாரம் 05 நலனாளிகளுக்கு ரூபா 168,000 பெறுமதியான 2,400 கன்றுகள் வழங்கப்பட்டிருந்தும் உரிய நலனாளிகளினால் அந்தக் கன்றுகள் பெறப்பட்டமை உறுதிப்படுத்துதப்படவில்லை.

  - வெலிப்பிட்டிய பிரதேச செயலகத்தினால் தெனிப்பிட்டிய பிரிவில் ஒரு நபருக்கு 250 தோடம் கன்றுகளும் 200 ரெகன் புறுட் கன்றுகளும் வழங்கப்பட்டிருந்தன. இதில் 150 தோடம் கன்றுகள் மாத்திரம் அப்பகுதியில் நட்டப்பட்டிருந்தன. ஏனைய கன்றுகள் ஒன்றுடன் ஒன்று குவிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 84,000 ஆகும்.

  - கம்புறுப்பிட்டியில் ஒரு நபருக்கு ரூபா 70,000 பெறுமதியான 1,000 பப்பாசிக் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டமை பகிர்வுப் பதிவேட்டில்

குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் 300 கன்றுகள் மாத்திரம் அப்பகுதியில் நட்டப்பட்டு எஞ்சிய 700 கன்றுகளும் நட்டப்படாமல் குவிக்கப்பட்டிருந்தன.

- இந்த செயற்திட்டத்தின் நோக்கத்திற்குப் புறம்பான செயற்பாட்டிற்காக ரூபா 98,572 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| | செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| விடய இலக்கம் | உச்ச எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 26201 | 53,000,000 | 43,142,334 | 36,000,000 | 41,904,230 | 200,000,000 | 177,283,079 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 26201 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 1,584,731 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந்த நிலுவையை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) மாவட்ட செயலகத்தினால் கடன் வழங்கும் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஏற்பாடுகள் பின்பற்றப்படாது ரூபா 1,395,592 கூட்டுத்தொகையான கடன் வழங்கப்பட்டிருந்தது.

**(இ) பொதுவைப்புக் கணக்கு**

மாவட்ட செயலகத்தில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 6003/0000/00/0038/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கிலுள்ள மீதி ரூபா 336,839,432 ஆக இருந்தது. தெவிநுவர பிரதேச செயலகத்தில் 02 வருடங்களை

விஞ்சிய ரூபா 577,860 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

**உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் 16 பிரதேச செயலகங்களின் 08 அலுவலகங்களில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

அலுவலகத்தின் சொத்து முகாமைத்துவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

மாவட்ட செயலகத்திற்குரிய 03 வாகனங்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டன. அந்த மூன்று வாகனங்களினதும் பெறுமதி எந்தப் பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மாவட்ட செயலகத்திற்குரிய அறிக்கை 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக 2012 ஆம் ஆண்டிலேயே வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) 2013 ஆம் ஆண்டிற்குரிய மாத்தறை திக்வெல்ல சுற்றுலா விடுதியின் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்படட மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.8 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | |
| | XIX ஆம் அத்தியாயத்தின் 5.2.1 ஆம் பிரிவு | 12,742 | அரசாங்க விடுதியொன்றில் குடியிருந்ததற்காக 06 மாத காலத்திற்காக வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| | (i) நிதிப் பிரமாணம் 103, 104 மற்றும் 109 | 103,213 | மாத்தறை மாவட்ட செயலகத்தின் கப் வாகனம் விபத்திற்குள்ளாகியமையினால் ஏற்பட்ட ரூபா 103,213 தொகையான நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) நிதிப் பிரமாணம் 7,221,310 1645(அ) மற்றும் 1646 | | 41 வாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த சம்பவ அறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) திறைசேரிச் சுற்றுநிருபம்

---------------------------------------

| | | |
|---|---|---|
| 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் | - | நிலையான சொத்துப் பதிவேடு பெணப்பட்டிருக்கவில்லை. |

## 1.9 செயற்திட்ட அமுலாக்கலின் நலிவுகள்

-------------------------------------------------------------------

மாவட்ட செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்

-----------------------------------------------------------------------------

நில்வெல்ல கெமகொடை ஊடாக தொடம்பகல வரையான வீதியின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 64,864,902 ஆக இருந்ததுடன் வேலை ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதிய 2011 யூன் 14 ஆகும். வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி 2011 நவம்பர் 10 ஆக இருந்த போதிலும் நிர்மாண வேலை நடவடிக்கைகள் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அத்திகதியில் நிர்மாணச் செலவினம் ரூபா 14,885,327 ஆக இருந்தது.

(ஆ) மாத்தறை பஸ் நிலையத்தில் வடிகாலமைப்பு முறைமையினை நிர்மாணிக்கும் செயற்திட்டம்

--------------------------------------------------------------------------------------------------------------------------

மாத்தறை மாநகர சபையின் மேற்பார்வையின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட மாத்தறை பஸ் நிலையத்தில் வடிகாலமைப்பு முறைமையினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நிதியேற்பாடு

ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்திற்காக நில மீட்டல் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினால் ரூபா 3,675,377 மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2011 திசெம்பர் 31 ஆந் திகதி முழுத் தொகையும் மாத்தறை மாநகர சபைக்கு மாவட்ட செயலகத்தினால் விடுவிக்கப்பட்டிருந்தது. இதற்கான ஆலோசனைக் கட்டணமாக ரூபா 116,046 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. 2013 யூன் 28 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பொது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வடிகாலமைப்பு முறைமைக்காக சமர்ப்பிக்கப்பட்ட திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நிர்மாணிப்பதற்கு உத்தேசித்த பஸ் நிலையத்தில் மலசலகூடத்திலிருந்து வெளிவரும் கழிவுகள் நேரடியாகக் கழுவிச் செல்லப்படாதிருந்தது. நிர்மாணத்தின் போது சபையின் பழைய வட்டித் தாங்கி ஊடாக அந்தக் குழியில் கழிவுப் பொருட்கள் சேர்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. அந்தத் தாங்கியில் சேர்கின்ற கழிவுப் பொருட்கள் தாங்கி ஊடாக சுத்திகரிக்கப்பட்டு எஞ்சிய நீர் 1986 மார்ச் 10 ஆந் திகதிய 392/6 ஆம் இலக்க வர்த்மானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட அறிவித்தலில் 62 ஆம் பிரிவின் நிமயங்களுக்கு முரணாக பிரதான வீதியின் வடிகாலுடன் இணைக்கப்பட்டிருந்தது. இந்த அசுத்த நீரிலிருந்து துர்வாடை வீசியது. அந்தக் காணும் உடைந்திருந்தது.

(ii) நகர சபைக்கு விடுவிக்கப்பட்ட தொகையில் ரூபா 2,061,097 தொகை நகர சபை, ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் உரிய வேலைகள் உரியவாறு நிறைவேற்றப்படாமையினால் மேற்கூறப்பட்ட தொகை மற்றும் ரூபா 116,046 தொகையான ஆலோசனைக் கட்டணம் மூலம் உரிய பயன்பாடு பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) வீதிக்கு காபட் இடும் செயற்திட்டம்

---------------------------------------------------------------

வீதிக்கு காபட் இடும் செயற்திட்டத்தின் கீழ் திக்வெல்ல சந்தியிலிருந்து முஸ்லிம் வீதி ஊடாக வெவுறுகன்னல விகாரை வரையான வீதிக்கு காபட் இடுவதற்காக 2011 யூலை 08 ஆந் திகதி முற்பணம் ரூபா 3,600,000 தொகையும், 2011 திசெம்பர் 31 ஆந் திகதி பெறுமதிசேர் வரியாக ரூபா 432,000 தொகையுமாக ரூபா 4,032,000 கூட்டுத்தொகையானது தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் செயற்திட்ட பிரிவிற்குச் செலுத்தப்பட்டிருந்தது. வேலையின் காலஎல்லை 05 மாதங்களாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் 2013

ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையில் முற்பணம் செலுத்தி 2 வருடங்களும் 3 மாதங்களும் வற் வரி செலுத்தி 1 வருடமும் 10 மாதங்களும் கடந்ததன் பின்னர் மாகாண அபிவிருத்தி மேலதிக செயலாளரின் 2012 யூன் 05 ஆந் திகதிய எம்ஈடீ/ஆர்டீ/பீஆர்டிபீ/எம்ரீ/01 ஆம் இலக்க கடிதத்தில் மேற்கூறப்பட்ட வீதி நிர்மாணம் இரத்துச் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக வெலுவனாராம வீதியின் வேஹெல்ல வரை அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது.

## 1.10 செயலாற்றல்

---------------------

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

---------------------------------------------------------------------------------------

2010 யூன் 23 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மாத்தறை பிரதேச செயலக நிர்மாணம் இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 194,000,000 மொத்தக் கிரய மதிப்பீட்டில் கையளிக்கப்பட்டிருந்தது. நிர்மாணம் 2012 மே 06 ஆந் திகதியளவில் வேலை பூர்த்திசெய்து கையளிக்கப்பட வேண்டும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உரிய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு கையளித்தல் 2014 யூன் 20 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணமாக ஒப்பந்தத் தொகையிலிருந்து 0.05 சதவீதம் அறவிடவேண்டிய போதிலும் 2014 யூன் 20 ஆந் திகதி வரையிலும் ரூபா 76,048,000 தொகைக்கான தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆலோசனைக் கட்டணமாக உடன்படிக்கை செய்யப்பட்ட ரூபா 9,787,404 தொகையிலிருந்து ரூபா 8,609,011 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் ஆலோசனை நடவடிக்கைகள் உரியவாறு கிடைத்திருக்கவில்லை.

(ஈ) 2014 யூன் 20 ஆந் திகதி ஒப்பந்தக்காரரினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 2,779,435 தொகையான மேலதிக மதிப்பீட்டுடன் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 196,779,435 ஆக இருந்தது. மேலதிக மதிப்பீடு பொது நிருவாக அமைச்சின் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2014 யூன் 20 ஆந் திகதிவரையில் கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் தாமதமாகியமையினால் விலை வேறுபாட்டின் அடிப்படையில் ரூபா 8,103,632 தொகை செலுத்துவதற்கு ஏற்பட்டிருந்தது.

(ஊ) உரிய நிர்மாணம் 2012 மே 06 ஆந் திகதிக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படாமையினால் பிரதேச செயலகம் தற்போது வாடகைக்குப் பெற்ற கட்டிடத்தில் நடாத்தப்படுகின்றது. இதனால் மாதத்திற்கு ரூபா 200,000 படி ரூபா 5,400,000 தொகையான எதிர்பார்க்கப்படாத வாடகையைச் செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

(எ) 2014 யூன் 17 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் வேலையின் இலக்கம் 4.05 மற்றும் 4.06 இல் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் உள்ளக வீதிகளின் வேலைப்பகுதிகள் நிறைவேற்றப்படாமை, தரைக்கு பதிக்கப்பட்ட டைல்ஸ் உரிய நிமயங்களுக்கு இணங்காமை, மின் விசிறிகளின் கப் கொங்கிரீட் தட்டில் சரியாக பொருத்தப்படாமை, பிரதான வாயிற் கதவிற்கு அருகில் டைல்ஸ் பதித்தலிலுள்ள குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன. அதற்கு மேலதிகமாக கட்டிடம் தொடர்பாக மாவட்ட செயலகத்தின் பொறியியலாளரினால் கட்டிடத்தில் 68 குறைபாடுகளுடனான அவதானிப்பு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 1.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை நடைமுறைகளைப் பின்பற்றாமை

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 ஆம் ஆண்டில் நிழற்படப் பிரதி இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்காக ரூபா 110,214 தொகையும், கணனி மற்றும் அச்சிடல் இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்கு ரூபா 463,140 தொகையுமாக ரூபா 573,354 தொகை தனியார் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9 வழிகாட்டியின் பிரகாரம் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. இந்த இயந்திரம்

ஆண்டின் போது ஒரு தடவையேனும் சேவிஸ் செய்யப்படாதிருந்ததுடன் அவ்வாறு செய்யப்பட்டிருக்குமாயின் இந்த பழுது பார்த்தல் செலவினத்தைக் குறைக்க முடியுமாக இருந்திருக்கும். பழுதுபார்த்தல் தொடர்பாக எழுத்து மூல உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 ஆம் ஆண்டின் போது மாவட்ட செயலகத்தினால் ரூபா 4,505,625 தொகையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. கூறுவிலைகள் கோரிய சந்தர்ப்பத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.7.5 வழிகாட்டியின் பிரகாரம் கொள்வனவுக் குழுவில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பான அறிவைக் கொண்டுள்ள ஒரு அங்கத்தவர் நியமிக்கப்பட்டிராததுடன் அந்தக் கொள்வனவுகளுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டு அதன் சிபார்சுகள் பெறப்பட்டமைக்கான தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) திக்வெல்ல பிரதேச செயலகத்தினால் 2013 மே 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட வெசக் பெரஹெரவிற்காக பல்வேறு அரசாங்க மற்றும் 10 தனியார் நிறுவனங்களிலிருந்து நன்கொடையாகக் கிடைத்த ரூபா 815,000 தொகை பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ❖ பெரஹெர 2013 மே 25 மற்றும் 26 ஆந் திகதிகளில் முடிவடைந்த போதிலும் 2013 மே 23 தொடக்கம் செப்தெம்பர் 06 ஆந் திகதி வரை நன்கொடை பெறப்பட்டிருந்தது.

- ❖ நிதிப் பிரமாணம் 170(2) இன் பிரகாரம் இந்த நன்கொடை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், அவ்வாறின்றி பிரதேச செயலகத்திற்குரித்தற்ற இச்செயற்பாட்டிற்காக பணம் நன்கொடையாகப் பெறப்பட்டு பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டு அதன் மூலம் பெரஹெரவிற்காக ரூபா 819,638 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 1.12 நட்டமும் இழப்பும்

-----------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டம் மற்றும் இழப்பு தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) உத்தியோகபூர்வ இல்லம் தொடர்பாக பொருட்பதிவேடு பேணுதல் தாபன விதிக் கோவையின் XIX ஆவது அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.3 பிரிவுகளின் பிரகாரம் இணங்கியிருக்கவில்லை. 2012 ஒக்தோபர் வரை பயன்படுத்தப்பட்ட 2 உத்தியோகபூர்வ இல்லங்கள் அகற்றப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக மாவட்ட செயலாளர் அறிவித்திருக்கவில்லை. 5 உத்தியோகபூர்வ இல்லங்கள் பயன்படுத்தப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் அதில் 3 உடைந்து விழுந்திருந்தது. இந்த இல்லங்கள் பழுதுபார்க்கப்பட்டு அரசாங்க ஊழியர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக வாடகை அறவிடல் தொடர்பாக தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அக்குரஸ்ஸ பிரதேச செயலகத்தின் முச்சக்கரவண்டி அத்துரலிய பிரதேச செயலகத்திலிருந்து 2012 மே 08 ஆந் திகதி கிடைத்திருந்தது. முச்சக்கர வண்டி 2013 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத இறுதிவரை சாதாரணமாக ஓடியிருந்ததுடன் செப்தெம்பர் மற்றும் ஒக்தோபர் மாதங்களில் 2 நாள்படி இறுதியாக ஒடியிருந்தது. அத்திகதியின் பின்னர் அந்த வாகனம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையினால் துருப்பிடிப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன் அலுவலகத்திற்கு தேவையற்றிருப்பின் உரிய தரப்பினருக்கு அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாவட்ட செயலகத்தில் ஏற்பட்ட 19 வாகன விபத்துக்களில் 05 விபத்துக்களின் நட்டம் 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை கணிப்பிடப்பட்டிருக்கவில்லை. எஞ்சிய 14 விபத்துக்களின் நட்ட இழப்புக்கள் ரூபா 1,141,194 ஆகக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த மொத்த விபத்துக்களிலும் ஏற்பட்ட நட்ட இழப்புத் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 ஆம் ஆண்டில் விபத்திற்குள்ளாகிய ரூபா 5,600,000 பெறுமதியான டொயட்டா ஹைலக்ஸ் வகையான கப் வாகனம் 2011 திசெம்பர் 25 ஆந் திகதி விபத்திற்குள்ளாகியிருந்தது. அந்த விபத்தில் ரூபா 1,817,098 ஆன நட்ட இழப்பு கணிப்பிடப்பட்டிருந்தது. அந்த நட்டத்தில் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து ரூபா 1,600,046 தொகை கிடைத்திருந்ததுடன் உதிரிப்பாகங்களுக்கான கழிவாக ரூபா 113,839 தொகை பழுதுபார்த்தல் செலவிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அரசாங்கத்திற்கு ரூபா 103,213 தொகை மேலும் அறவிடவேண்டிய நட்டமாக ஏற்பட்டிருந்த போதும், அந்த நட்டம் தொடர்பாக நிதிப்பிரமாணம் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ மாவட்டச் செயலகத்தினால் 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.13 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

மாவட்டச் செயலகத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளுக்கிடையே பின்தொடர் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத பந்திகளின் தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | | |
| 2012 | 4-1(ஈ)(105) தலைப்பு (vii) | - | திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கன்றுகளைக் கொள்வனவு செய்து பகிர்ந்தளித்தல் |
| 2012 | 5-1(ஆ) | - | கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல் |

## 1.14 முகாமைத்துவ நலிவுகள்

-----------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) திக்வெல்ல பிரதேச செயலகப் பிரிவிற்குரிய பம்பறுன்த தகுன மாற/1859 ஆம் இலக்க பிரதேசப் பத்திரத்திற்குரிய பங்கலாவத்த பெயருடைய காணிக் கூறு தனியார் கம்பனிக்கு கொடுப்பனவு பத்திரத்தின் மூலம் 2007 சனவரி 18 ஆந் திகதி முதல் வழங்கப்பட்டிருந்தது. இந்தக் காணியை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதி காணி ஆணையாளரினால் 2007 பெப்ரவரி 05 ஆந் திகதிய கடிதத்தின் மூலமும் அக்கொடுப்பனவு பத்திரத்தின் மூலப்பிரதி மற்றும் உபபிரதி திக்வெல்ல பிரதேச செயலாளருக்குச் சமர்ப்பித்து அறிவிக்கப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்தக் காணியைப் பதிவுசெய்வதற்கு திக்வெல்ல பிரதேச செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த வாடகையாளரிடமிருந்து உரிய வாடகைப் பணம் 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிராததுடன் அது தொடர்பாக எவ்வித தகவல்களும் பிரதேச செயலாளரினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) மரணமடைந்த ஓய்வூதியக்காரர்களின் விபரங்கள் மாத்தறை பிரதேச செயலகத்திற்கு விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கான முறைமையொன்று காணப்படாமையினால் 2013 ஆம் ஆண்டில் ஓய்வூதியச் சம்பளமாக மரணமடைந்த ஓய்வூதியக்காரர்களின் பெயரில் செலுத்தப்பட்ட ரூபா 2,056,310 தொகை மீள அறவிடப்பட்டிருந்தது. இதற்காக உரிய முறைமையொன்று காணப்படாமையினால் அரசாங்கத்தின் நிதி தேவையற்றதாக ஏனைய தரப்பினரின் பொறுப்பில் வைத்துக்கொள்வதற்கு அவகாசமளிக்கப்பட்டிருந்தது.

(இ) திக்வெல்ல பிரதேச செயலகத்திற்குரிய அரசாங்கத்தின் விடமைப்புத் தொகுதியின் வீடொன்றிற்காக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 12,742 தொகை அறவிடப்படாது காணப்பட்டது. அவ்வாறே இந்த அரசாங்க வீடுகளின் வாடகை அறவிடும் முறைமையொன்று தயாரிக்கப்பட்டிராததுடன் வாழ்க்கைத் துணை அரசாங்க ஊழியராயின் வாழ்க்கைத் துணையிடமிருந்து அறவிட வேண்டிய வாடகையை பெற்றுக்கொள்ளலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் வாழ்க்கைத் துணையின் பங்கு அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிரதேச செயலகத்தின் பொறுப்பில் உள்ள பராயமடையாதவர்களின் கணக்கு குறிப்பிட்ட காலம் பூர்த்தியடையும் போது அவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், திக்வெல்ல பிரதேச செயலகத்தினால் 2006, 2007, 2010, 2011 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது வயது பூரணமடைந்த 4 பராயமடையாதவர்களின் கணக்குகள் உரிய நபர்களுக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.15 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட நிலை | 08 | 07 | 01 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 03 | - | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 79 | 91 | - | 12 |
| (iv) | ஆரம்ப நிலை | 14 | 16 | - | 02 |
| | மொத்தம் | 103 | 117 | 01 | 15 |

### (ஆ) செயற்பாடற்ற மனித வளங்கள்

மாத்தறை பிரதேச செயலகத்தில் 117 பட்டதாரிகளுக்காக எவ்வித கடமைகளும் கையளிக்கப்படாமல் 2013 ஆம் ஆண்டின் போது சம்பளமாக ரூபா 16,686,240 தொகை செலுத்தப்பட்டிருந்தன.